241

ம்பதி

குமரக்கடவுள்

ஞானவுலா

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
14 JUL 1933
MADRAS

Q 26:38·2119 6 KA
N33.
170885

வாமி பாலானந்த ஸரஸ்வதி

உ

குகமயம்

கொடுமளம்பதி குமரக்கடவுள்

ஞானவுலா

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
14 JUL 1933

இது
திருவுத்தரகோசமங்கை
பிரம்மஸ்ரீ மு. ஈசுவர ஐயரவர்களிடமிருந்த
ஏட்டுப் பிரதியிலிருந்து
கதிர்காமம்

ஸ்ரீ ஸ்வாமி பாலானந்த ஸரஸ்வதி

அவர்களால் திருத்தி யெழுதப்பட்டு

சாது அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பெற்றது.

ஸ்ரீமுக௵ ஆனிமீ
1933

[உரிமை பதிவு செய்யப்பெற்றது]

800 009
17088

2339
894.8111

குமரமயம்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
14 JUL 1933
MADRAS

முகவுரை

உலா என்பது தமிழிலுள்ள தொண்ணூற்றாறு பிரபந்தங்களுள் ஒன்று. உலா என்பது பவனி வருதல். இது பாட்டுடைத் தலைவனது பவனியைச் சிறப்பித்துப் பாடப் பெறுவதால் உலா எனப் பெயர்பெறும். இது தலைவன் வீதிகளின் வழியாய்ப் பவனிவருங்காலை வீதிகளிலுள்ள பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம்பெண் ஆகிய இவ்வேழு பருவ மகளிரும் அத்தலைவனைக் கண்டு அவன்மீது காதல் கூர்ந்ததாகக் கலிவெண்பாவாற் பாடப்பெறுவது. பண்டைக்காலத்துத் தமிழ்ப் புலவர்கள் தங்கள் தங்கள் கல்வித் திறத்துக்கேற்பக் கருத்துக்களைத் தொடர்ச்சியாக வமைத்துத் தங்கள் வழிபடு கடவுள் மீதும், தங்கள் ஞானசாரியர்கள் மீதும், தங்களை யாதரித்த பெரியார்கள் மீதும் அநேக உலாக்களைப் பாடியுள்ளார்கள். இம்மூன்று வகைகளுள் இவ்வுலாவானது முதலில் சொன்ன வகையினு ளடங்கும்.

2. இவ் வுலாவிற்குப் பாட்டுடைத் தலைவனாக விளங்குபவன் கொடுமளம்பதி வாழ் குமரக்கடவுளாம். இத் தலம் பாண்டி நாட்டில் இராமநாத புரத்தைச் சார்ந்ததோர் சிற்றூர்.

இங்கு முருகப் பெருமான் ஒரு குடைபோன்று விளங்கும் ஒரு வகை மரத்தின் கீழ் திருக்கோயில்கொண் டெழுந்தருளி யிருக்கின்றான். இவ்விருக்ஷத்தை யவ்வூரார் உடை விருக்ஷ மென வழங்குகிறார்கள். இத் தலத்தில் முருகன் சாந்நித்யம் விசேஷம்.

3. இந்நூலை யியற்றிய ஆசிரியர் பெயரும் காலமும் விளங்கவில்லை. ஆயினும், இதுவும் ஒரு பழமையான நூலா யிருக்கலாமென ஊகிக்க இடமுண்டு. இந்நூலை யொரு ஏட்டுப் பிரதியிலிருந்து பிரம்மஸ்ரீ ஈசுவரய்யர் அவர்கள் பரி சோதித்து ஒரு காகிதப் பிரதியாகச் செப்பனிட்டு அச்சிடும்படி என்னிடம் தந்தார்கள். இது என்னிடம் கிடைத்துச் சிலகால மாகியும் இச்சமயம் அச்சிட நேர்ந்தது கலியுகவரதரது கருணை போலும். இந்நூலை அநேக அன்பர்கள் கையெழுத்துப் பிரதிக ளாகச் செய்துகொண்டு பூஜா காலங்களில் பாராயணஞ் செய்து எண்ணிய எண்ணியவாங்கு எய்தினர்களாதலால் இது பலர்க்கும் பயன்பட வேண்டுமென்ற எண்ணங் கொண்டு இப்பொழுது இதை யச்சிட்டு வெளியிடலாயிற்று.

4. இனி மற்றைய வுலாக்களிலுள்ள இலச்கணப் பிரிவுக ளெல்லாம் இந்நூலில் காணாதிருந்தும் இந்நூலுக்கு இப்பெயர் கொடுத்தது எதற்கு என ஓர் ஆசங்கை நிகழும். இது கலி வெண்பாவால் பாடப்பெற்றும், உலாவென நூலாசிரியரா லேயே பெயர் கொடுக்கப்பெற்றும் இருப்பதாற்றான் உலா எனக் கொள்ளல்வேண்டும்.

5. இத்தகைய தெய்வீகம் வாய்ந்த இவ்வரிய நூலைப் பலர்க்கும் பயன்படும்படியாய் அச்சிட்டுதவும்படித் தூண்டிய அன்பர்களுக்கும், இதனை அச்சிடுவித்த சென்னை ஸ்ரீ கந்த கோட்டத்துச் செட்டிக் குமாரனது திருவருட்குப் பாத்திரரும், ஸ்ரீமத் பாம்பன் - குமரகுருதாச சுவாமிகளது சீடருளொருவருமான எனது நண்பருக்கும் எல்லாம் வல்ல இறைவனாகிய அறுமுகச் சிவனார் தண்ணளி புரிவாராக.

6. இந்நூலை அச்சிடுவதற்குத் துணையாயிருந்த அன்பர்கட்கும், இதனை அழகுற அச்சிட்டுத் தந்த சாது அச்சுக் கூடத்து அதிகாரிகட்கும் கொடுமளம் பதிவாழ் குமரக் கடவுள் எல்லா நன்மைகளையு மளிப்பாராக.

இங்ஙனம்:

ஸ்ரீமுகஹூ மிதுன ரவி கவ — கதிர்காமம் - ஸ்ரீ ஸ்வாமி பாலானந்த சரஸ்வதி.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
14 JUL 1933
MADRAS

உ

குகமயம்

கொடுமளம்பதி குமரக்கடவுள்

ஞானவுலா

1 செங்கமலத் தண்ணல் இலகு செழுங்கமலச்
செங்கமலத் தண்ணலெனுஞ் செந்திலன்—செங்கமலக்
கங்கைமகன் கந்தன் கருணை பொழிவதனக்
கங்கை மகனுகக் கனதயான்—கங்கையருள்
சேந்தன் குகன்கடம்பன் செவ்வே ளெனுமினிய
சேந்தன் குகன்கடம்பன் செவ்வேளன்—செந்தனெ
கார்த்திகே யன்முருகன் காமா யுதஞ்சிறந்த [ழில்
கார்த்திகே யன்முருகன் காங்கயன்—கார்த்திகையாள்
5 தந்த சரவணத்தன் தந்த சரவணத்தன்
தந்த சரவணத்தன் தாணுவான்—தந்தையருள்
முதலா கமத்தன் முடிவிலோ ரைந்துமென
முதலாக மத்தன் முடிவிலான்—முதலான
ஆறு முகத்தன் அறுமுகத்தன் தேவருக்காய்
ஆறு முகத்தன் னருமுகத்தன்—ஆறுமுகம்
குன்றைத் துகள்படுத்துங் கூர்வேலன் வெய்யவினைக்
குன்றைத் துகள்படுத்துங் கூர்வேலன்—குன்றெடுத்து

நின்றான் மருகன் நிமலன் திருமருகன்
நின்றான் மருகன் நிராலம்பன்—நின்றாடு
தூய கலபத் துரகத் துகந்தேறுங்
தூய கலபத் துரகத்தன்—தூயவெள்ளை
விடையா னமலன் விமலன் திருமருகன்
விடையா னமலன் விமலன்—விடைசிறந்த
கமலா சனத்தன் கடைநாளிற் றோன்றுமிரு
கமலா சனத்தன் கமலத்தன்—கமலநிறை
ஆக்குஞ் சரவணத்தன் ஆறு சமயவிதம்
ஆக்குஞ் சரவணத்தன் ஆதியன்—ஆர்ப்பரவ
வீரமுண்டு கொண்டடர்ந்து மேலெழுந்து வங்கிபொங்கி
வீரமுண்டு சூரைவென்ற வேலினன்—வீரமிகும்
வீரநுக்ர துங்கன் விதங்கன் விபட்சணமால்
வீரநுக்ர துங்கன் விதங்கன்—வீரநுக்ர
ஆறு மிருநான்கும் ஐயைந்து மிரண்டுபத்தும்
ஆறு மிருநான்கும் ஆகினான்—ஆறுவித
எட்டெட்டு நான்கும் இருபத்தோ ரைந்துமதில்
எட்டெட்டு நான்குவீ டெய்தினான்—எட்டெட்டாய்
மூந்து முதலில் முடிவுங் கடைநடுவும்
மூந்து முதலின் முடிவிலான்—மூந்துமுதல்
மூவாறு மாறும் முடிவிலோ ரைந்துமதில்
மூவாறு மாறு முதலினான்—மூவாறு

20 சட்டாட் சரத்தன் சடாட்சரத்தின் வீருடைய
சட்டாட் சரத்தன் சடாட்சரத்தன்—சட்டமிகு
சட்கோண வீதி தவள நவகோண
சட்கோண சக்கரமாத் தாபிதன்—சட்கோணத்
தெண்ணுன் குமைந்தும் ஈறிலட்ட கோணத்
தெண்ணுன்கு மைந்துவீ டெய்தினுன்—எண்ணுன்கு
வட்டமிட்ட கோட்டை மகா வதிகார
வட்டமிட்ட கோட்டைமதி வாசலான்—வட்டமிட்ட
துருவன் துருவனெனச் சொல்லி லடங் காமௌனத்
துருவன் துருவனெனத் தோன்றினுன்—துருவனவ
25 சமர துரங்க தவள நளினவித
சமர துரங்க சதுரங்கன்—சமரமுக
வேதாள கோரரண பீஜா க்ஷரப்பிரும்ம
வேதாள கோர ரணவீரன்—வேதாள
ஆதி யுரகபண அவனி னிதியாகி
ஆதி யுரகபண ஞகினுன்—ஆதிநாள்
சம்மார கால சட்ராக்னி வடிவு
சம்மார காலவர சாம்பவன்—சம்மார
உதிர ரணபகிர உன்மத்த ருத்ர
உதிர ரணபகிர உன்மத்தன்—உதிரமிகு
30 மாசான ருத்ர மவுன சிவயோக
மாசான ருத்ர மவுனத்தன்—மாசடையா
அட்டவித மூர்த்தன் அனங்கனனி தானபத
அட்டவிதத் தட்டவித மாகினுன்—அட்டவித

திசைபுரக்குந் தேவாய்ச் செயலாய்ப் பிரும்மாவாய்
திசைபுரக்குந் தேவாய்ச் செயலுற்றான்—திசைபுரக்கும்
இந்திரனு மிந்திரனும் இன்பஞ் சிறக்கவருள்
இந்திரனுக் கிந்திரனு மென்கோமான்—இந்திரனும்
விதுவைக் கதிரோனை வென்றார்க் கைக்குளுவை
விதுவைக் கதிரையணி வேணியன்—விதிமேவு
குன்றைத் திருத்தணிகை கோதிலாச் சோலைமலை
குன்றைத் திருத்தணிகைக் கோயிலான்—குன்றிலகு
ஏரகத்தி லேரகத்தில் ஏற்றித் தராதலத்தில்
ஏரகத் திலேவாழும் என்கோமான்—ஏரகமாம்
செந்திலெனச் செந்திலெனத் தென்கோ புரனீடு
செந்திலெனச் செந்திலெனச் செந்திலன்—செந்திலகு
போரூர் கருவூர் புகுதா பழனிமலை
போரூர் கருவூர் புகுந்துளான்—போரூரும்
முதிர்காம ஞேக்கினிய மோன மருந்தாய்
கதிர்காம மேவும் கதிர்காமன்—எதிராடும்
போராடு சூரைப் பொருதாடி நீராடிப்
போராடு சூரைப் புராரியான்—போரடர்ந்த
ஐம்மா நிலத்தி லமர்ந்தான் பிணுகியெனும்
ஐம்மா நிலத்தி லமர்ந்துளான்—ஐமாவின்
ஒன்று படுமூல உதிர தளத்தூடே
ஒன்றுபட நின்றங் குலாவினன்—ஒன்றுபடு

800 009
170885
026:38.211961
N33

நாபிக்குங் கீழாக நாற்கோண மண்டபத்துள்
நாபிக்குங் கீழாக நண்ணினான்—நாபியுள்ளே
சுற்றிய நாடிச் சுழுனை வழியாகச்
சுற்றிய நாடிச் சுழுனையான்—சுற்றியெழு
நாடிகுண மூன்றா னாற்கரணா மைம்புலனும்
நாடி குணமூன்றா னாடினான்—நாடிமிசை
விந்தைக் கருவி விளையாட் டயன்மாலோன்
விந்தக் கருவிவிளை யாட்டினான்—விந்தைபிதா
மேல்நாடு மாறும் மேவுபத நான்கும்
மேல்நாடு மண்டலமு மேவினான்—மேல்நடுவே
போது முடித்துப் பொடியகல மதிசேரப்
போதுமணி மண்டபத்தே போந்துளான்—போதுநிறை
தட்டைத் திறந்து தலத்துள் கமலநடுத்
தட்டைத் திறந்த தயாநிதியான்—தட்டொற்ற
மேலாம் பரவெளியில் மேதினியெ லாநிறைந்து
மேலாம் பரவெளியில் மேவினான்—மேலான
இருநான்கு சித்திக் கியலுமட்ட யோகசித்தி
இருநான்கு சித்திக் கியல்பினான்—இருநான்கு
நான்கு கலையாகி நாதவிந்துக் கப்பாலே
நான்கு கலையாகி நடஞ்செய்வோன்—நான்குகலை
ஒன்றா யிரண்டாய் ஒன்றிரண்டா யொன்றிலதாய்
ஒன்றா யிரண்டாய் உருவுளான்—ஒன்றிரண்டாய்
உருவா யருவா யுருவருவா யொன்றுமின்றி
உருவா யருவாய் ஒன்றுமிலான்—உருவருவாய்

55 கோடி ரவிமதியுங் கூடி யொளிருமெழில்
கோடி ரவிமதியுங் கோடியான்—கோடிரவி
அழியு மழியா தனந்தம் பலகோடி
அழியு மழியா தழிவிலான்—அழியுநாள்
காலாக் கினிரூப கண்டவுப சம்மார
காலாக் கினிவடிவுக் காட்சியான்—காலாக்னி
மேலுந் தலைகீழும் மேன்மேலு மண்டபிண்ட
மேலுந் தலைகீழும் மேவினான்—மேல்கீழும்
தலையுட் சராசரங்கள் தானாகிப் பின்னும்
தலையுட் சராசரமாத் தாங்கினான்—தலையுட்ச
60 உள்ளத்தி னுள்ளே ஒளிரு மொளியாகி
உள்ளத்தி னுள்ளே உறைகுவோன்—உள்ளத்தின்
வஞ்சருக்குந் தோன்றாத வஞ்சனவன் வஞ்சமிலா
வஞ்சருக்குந் தோன்றும் வதிநாதன்—வஞ்சருக்குக்
கண்ணாடிக் கண்ணாடிக் கண்புருவத் தேத்திநிதம்
கண்ணாடிக் கண்டவர்க்குக் காட்சியான்—கண்ணாடித்
தோன்று சமுசாரத் துன்ப சமுத்திரத்தில்
தோன்று சமுசாரச் சோங்கினான்—தோன்றிவரு
சமய பதங்கமிரு தத்துவமெ லாங்கடந்த
சமய பதங்கமிரு சாம்பவன்—சமயபதச்
65 சம்புகௌ ரீசனென்று சந்தனென்று முன்புவரு
சம்புகௌ ரீசத் தாதையான்—சம்புவென

வந்து வசீகரத்து மாமோக னத்துநிதம்
வந்து வசீகரமா மோகனத்தன்—வந்துவசீ
ஆகருட பேதனத்தன் அன்பதுமொன் றுனதுகை
ஆகருட பேதனத்தன் ஆதாரன்—ஆகருட
தம்பனத்த னுச்சா டனத்தன் சருப்பகுகக்
தம்பனத்த னுச்சா டனத்தன்—தம்பனத்தின்
மாவித்து வேடணத்தன் மாரணத்தன் ஆரணத்தன்
மாவித்து வேடணத்தன் மாரணத்தன்—மாரணத்து
உகார வகாரத் துதிக்கு மோங்கார
உகார வகாரத் துறைவோன்—உகாரவட்ட
ரீங்காரச் சவ்வும் எழில்சேர் மகாரவிந்து
ரீங்காரச் சவ்வு ளிருப்பவன்—ரீங்கார
பத்மா சனத்திலகு பஞ்சாட் சரநடுவில்
பத்மா சனத்தில் பதிந்துளான்—பத்துமத்தின்
எட்டுமீ ரெட்டும் எழில்சேர் மகாரவிந்து
எட்டுமீ ரெட்டெட் டெழுத்தினன்—எட்டாத
நத்துவத்தி னுள்ளாகி நானுகித் தானுகி
நத்துவத்து ளத்துவித்த ஞானபரன்—நத்துவத்துள்
ஐயுங் கிலியு மகாரசகா ரத்தனையும்
ஐயுங் கிலியும் வழங்கினுன்—ஐயுமெழில்
சயம்பு வளையேந்திச் சங்கரனுந் தானுகிச்
சயம்புவளை யேந்துஞ் சடாதரன்—சயம்புவளை
ஆன்ந்த நாதை ஆதாரை மாகோரை
ஆனந்த நாதை ஆதாரை ஆனந்த

நிர்த்த நடனலை நிமலை யகோரை
நிர்த்த நடனலை நிராதாரை—நிர்த்தமிடு
உன்மனு தீதத் தொளிருமோங் காரபஞ்ச
உன்மனு கண்டி உன்மத்தை—உன்மனையுள்
80 அண்டமுண்ட குண்டலிமுன் னனுபர்க்கமலை
அண்டமுண்ட வுந்தி அவுதாரை—அண்டமுண்ட
அமுதகலா தீதை ஆதார வீரை
அமுதகலா தீதசுத ஞகினன்—அமுதொழுகு
தாராதா ராகருணச் சந்திரோ தயமவுலி
தாராதா ராகருணச் சண்முகன்—தாராடு
நரசிம்ம வீர ரணகோர வுத்தண்ட
நரசிம்ம ராம ரவுத்திரன்—நரசிம்ம
வயிர வடுக வாயுட் பிரகாச
வயிர வடுக மாயூரன்—வயிரமிடு
85 சங்குசக்ர சூலபிண்டி தண்டுசூ லந்தாங்கு
சங்குசக்ர சூலத் தார்க்கோலன்—சங்குசக்ர
மாகால பாச வரவீர கம்பீர
மாகால பாச வரவீரன்—மாகால
உரகபண கால விடமுண்ட வுக்ர
உரகபண கால உரஉக்ரன்—உரகபண
வண்டலண்ட குண்ட மௌனப்பிரி யங்கதவ
வண்டலண்ட குண்ட வரநாதன்—வண்டலண்ட

600 008
70885

B 15
026:38.21196(cr)
NB
REGISTRAR OF BOOKS
14 JUL 1933
MADRAS

லலல லலல லவணப்பிரி யங்கதவ
லலல லலவ நலவணிகன்—லலலரவ
90 டுண்டுடுண்டு டுண்டு டிமிடா டிமிடென
டுண்டு டுண்டு டுண்டு பேரியான்—டுண்டுடுண்டு
திமிதிமி தத்தி சகண கணன
திமிதி நடனமிடு சேவலன்—திமிதியெனும்
சண்டப்ர சண்டநவ கண்டவுப சம்மார
சண்டப்ர சண்ட தகரிநான்—சண்டப்ர
பூதிசிவ பூதியனு பூதிசிவ பூதியணி
பூதிசிவ பூதியனு பூதியான்—பூதியணி
வச்ரா யுதக்கவச வல்லவுண சம்மார
வச்ரா யுதக்கவச வல்லவன்—வச்ரமென
95 வருபூத வேதாள வஞ்சவினை யஞ்சவரு
வருபூத வேதாள தூளிதன்—வருபூத
வெய்யபில்லி வஞ்சவினை வேள்விசெய்வோர் தன்னுடலை
வெய்யபில்லி வெய்யதழல் வீழ்த்தினோன்—வெய்ய
கொடுநோய்க் கருமருந்தாய் கொடியோர்க் கிடியேறாய்
கொடுநோய்க் கருமருந்தாங் கூர்வாளன்—கொடியோர்பால்
செல்லா திருத்தித் திருவருளைத் தான்செலுத்திச்
செல்லாத செல்வமருள் சேவலன்—செல்லாரும்
கொடுமட் பதிக்குமுயர் குன்றுதோ றாடல்
கொடுமட் பதிக்குமுயர் கோயிலன்—கொடுமள்
100 உடையான் உடைநிழலில் உற்றதவ யோகம்
உடையா னெனையா ளுடையான்—உடைசேரும்

செங்கமலத் தண்ணல் செழுமறையோர் தேவர்முதல்
செங்கமலத் தாடொழுஞ் சேவகன்—செங்கமல
உற்பவித்த வற்புதனை ஓதா மறையானை
உற்பவித்த நெஞ்சத் துணருவோன்—உற்பவித்த
சென்மவினைக் கன்மம் செழுங்கதிர்முன் னேபனிபோல்
சென்மவினைக் கன்மத் திரட்சிப்போம்—சென்மவினை
104 இல்லை மயலில்லை தொடர்பில்லை இருளில்லை
இல்லை பயமில்லை இகத்தும்வாழ் வாரிசைந்து.

கோடுமட்பதிவாழ் குமாரக் கடவுண்மீது பாடிய ஞானவுலா முற்றுப் பெற்றது.